**கவனிக்க.**- *2010.01.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1636 - 2010 ජනවාරි මස 08 වැනි සිකුරාදා - 2010.01.08**

*1636 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 44 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 46 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் யூரிமார் பட்டியலொன்று மும்மொழிகளிலும் தனித்தனியாக பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, சனவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, சனவரி மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணி அதிகாரப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய இராச்சியம், என்13 4பிளஸ், லண்டன், கிரீன் லேன், இல. 483 ஐச் சேர்ந்த கிம் லிண்டா ஜோன் கூலிங் (பிரித்தானிய பாஸ்போர்ட் இல. 094328517 ஐக் வைத்திருப்பவர்) ஆகிய என்னால் காலியைச் சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய பின்து விக்கிரமசேக்கரவினால் உறுதிப்படுத்தப்பட்ட 2009, ஓகத்து 9 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணி அதிகாரப்பத்திரம் இல. 535 மூலம் மாஹிட புபுது மாவத்தை, "த ரீஃப் ஹவுஸ்" ஐச் சேர்ந்த இவான் மெல்கம் டெயிலர் (பிரித்தானிய பாஸ்போட் இல. 039887308 ஐ வைத்திருப்பவர்) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணி அதிகாரப்பத்திரம் செல்லுபடியாகாததாக்கப்பட்டு இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் எனது சார்பாக அவரால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் நான் இத்தால் அறியத்தருகின்றேன்.

கிம் லிண்டா ஜோன் கூலிங்.

இல. 483, கிரீன் லேன்,
லண்டன் என் 13, 4பிளஸ்,
ஐக்கிய இராச்சியம்.

1-286

---

## பகிரங்க அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொதுமக்களுக்கு இத்தால் தெரிவிப்பதாவது-

எஸ். எம். பி. கேனங்க இன்வெஸ்ட்மென்ட் கோபரேஷன் லிமிட்டெட் ஒரு வரையறுக்கப்பட்ட பொதுமக்கள் பொறுப்புகளின் கம்பனியாகும். இக்கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட இல. பீபி 300. அதனுடைய பதிவக அலுவலகம், கொழும்பு 1, இல. 69, சனாதிபதி மாவத்தையில் அமைந்துள்ளது. இதனுடைய பங்கு மூலதனம் பத்து கோடியே எழுபது ரூபாவாகும் (ரூ. 10,00,00,070). இத்தொகை இரண்டு கோடியே ஐம்பத்து இலட்சத்து எழுபது ரூபாவாகக் (ரூ. 2,50,00,070) குறைக்கப்படும்.

இவ்வறிவித்தல் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் இக்கம்பனியின் இயக்குனர் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டவாறு ஒரு சாதாரண விசேட பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். சொல்லப்பட்ட பங்கு மூலதனம் குறைக்கப்பட்டதானது, 2007 ஆம் வருட கம்பனிகள் சட்டம் இல. 7, பிரிவு 59 இன்படி செயற்படுத்தப்படும்.

உத்தேசிக்கப்பட்ட விசேட சாதாரண பொதுக்கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டவாறு, பங்குதாரர்களின் பிரேரணையில் குறைக்கப்பட்ட தொகையானது இரண்டு கோடியே ஐம்பது இலட்சத்து எழுபது ரூபா (ரூ. 2,50,00,070) ஆகும். இவை ஒரு கோடியே ஏழு ரூபா (ரூ. 1,00,00,007) கம்பனியின் சாதாரண பங்குகளாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இன்டர்நெஷனல் கொன்சல்டன்சி அன்ட் கோப்பரேட் சர்விஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனியின் செயலாளர்கள்.

இல. 35/1, டிக்மன்ஸ் றோட்,
கொழும்பு 05,
2009.12.19.

1-285

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் ஏ. டீ. என். பிளாண்டேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் தனது பெயரை "ஏ. பீ. என். பிளாண்டேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்" என 2009.11.16 ஆந் திகதி முதல் மாற்றம் செய்துள்ளதை இத்தால் அறியத்தரப்படுகிறது-

கம்பனி இலக்கம் : பீவீ 63368
பதிவு முகவரி : இல. 195/1எப், கொஸ்கஹவத்த மாவத்தை, மலபல்ல, பன்னிபிட்டிய

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏ. பீ. என். பிளாண்டேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்.

1-248

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது :-

(1) கம்பனியின் பெயர் : பி. ஏ. விஸினஸ் குறூப் (பிறைவேட்) லிமிட்டெட்
(2) கூட்டிணைப்பின் இலக்கம் : பீவீ 60687
(3) பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 94, இத்ரீஸ் மௌலானா வீதி, அக்கரைப்பற்று 01

கம்பனிச் செயலாளர்.

1-282

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

(1) கம்பனியின் பெயர் : ஏர்வின் வர்ணசூரிய மற்றும் ஆர். ஏ. பெர்னான்டோ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

(2) கூட்டிணைப்பின் இலக்கம் : பீவீ 69119

(3) பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 105/ 1 - 1/ 1, துட்டுகெமுனு வீதி, கொகுவல

கம்பனிச் செயலாளர்.

1-283

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 334 (2) இன் பிரகாரம் பொது அறிவித்தல்

வின்க் எட்வரைஸிங் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பற்று வைப்பாளர்களின் கூட்டம்

வின்க் எட்வரைஸிங் (பிறைவேட்) லிமிட்டெட் (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "சொல்லப்பட்ட கம்பனி" என குறிப்பிடப்படும்) இன் பற்றுவைப்பாளர்கள் (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334 ஆம் பிரிவின் பிரகாரம்) இன் கூட்டம், பின்வரும் நோக்கங்களுக்காக கம்பனிகள் சட்டத்தின் 334(3) (பி) ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர்களினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட திரு. கலீரஸ் மல்லவஆரச்சியின் தலைமைத்துவத்தின்கீழ் கொழும்பு 10, நொறிஸ் கனல் வீதி, இல. 110, இலங்கை மது வடித்தல் கம்பனியின் சபை அறையில் 2010, சனவரி 22 ஆந் திகதியன்று நடைபெறுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### நிகழ்ச்சி நிரல்

1. சொல்லப்பட்ட கம்பனி பற்று வைப்பாளர் கூட்டத்தில் சொல்லப்பட்ட கம்பனி பணிப்பாளர்களினால் வைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் ஆவணங்களில் தங்கள் கோரிக்கைகளின் மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் சொல்லப்பட்ட கம்பனியின் பற்றுவைப்பாளர்களின் பட்டியலுடன் சேர்த்து சொல்லப்பட்ட அலுவல்களின் நிலைமைகளின் முழுக்கூற்றின் கவனத்தை ஈர்த்தல்.

2. கம்பனியின் சொத்துக்கள் வழங்கல் மற்றும் அலுவல்களை ஒடுக்கும் நோக்கத்திற்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 335 ஆம் பிரிவின்கீழ் கம்பனியின் ஒடுக்குதலுக்கென நபர்களை நியமித்தல்.

3. அதன் ஏற்பாடுகளுக்காட்பட்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 336 ஆம் பிரிவின்கீழ் பொருத்தமானது என எண்ணும்போது 5 நபர்களுக்குக் குறையாதோரைக் கொண்ட மேற்பார்வையாளர் குழுவொன்றை நியமித்தல்.

4. கம்பனிகள் சட்டத்தின் 337(1) ஆம் பிரிவின்கீழ் ஒடுக்குநரின் நட்டஈட்டை நியமித்தல் (மேற்பார்வைக் குழு நியமிக்கப்படாவிட்டால்).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பினான்ஸியல் சேர்விஸஸ் அன்ட் கொமர்ஷியல் ஏஜன்ஸீஸ் லிமிட்டெட்,
வின்க் எட்வரைஸிங் (பிறைவேட்) லிமிட்டெட்டின் செயலாளர்கள்.

**குறிப்பு**.- வேறு நடத்தப்படும் கம்பனிகளின் கூறு அல்லது அதன் பணிப்பாளர்களின் தீர்மானத்தினால், 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கருத்திற்கமைய ஒரு கம்பனியாக இருக்கின்ற வைப்பாளர், 138(1) (பி) ஆம் பிரிவின் பிரகாரம் பற்று வைப்பாளர்களின் இக்கூட்டத்தில் வாக்களிக்க உரித்துடையவரான ஒரு பற்றுவைப்பாளர் (கடன் பத்திரம் வைத்திருப்பவர் உட்பட) ஏதேனும் சட்டப்படியான கம்பனி அல்லது நம்பகமான உறுதிக்கமைய அல்லது அதன்கீழ் செய்யப்படும் ஏதேனும் விதிகள் அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கமைய நடாத்தப்படும் கம்பனி பற்று வைப்பாளர் கூட்டத்தில் அதன் பிரதிநிதிகள் என பதிற்கடமையாற்ற பொருத்த மானவர் என எண்ணுகின்ற அத்தகைய ஆட்களுக்கு அதிகாரமளிக்கப் படுகின்றது.

1-373

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இல. 79, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு 00700 என்னும் முகவரியைச் சேர்ந்த சரோஜினி ரட்ணராஜ் நவரட்ணம் ஆகிய நான், எனது அற்றோணித் தத்துவக்காரராக இல. 14, பகத்தல வீதி, கொழும்பு 00300 என்னும் முகவரியைச் சேர்ந்த திரன் ஜெய்கிஷன் நிர்மலலிங்கம் என்பவரை (தேசிய அடையாள அட்டை இல. 670013910V உடையவர்) எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமனம் செய்த கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சஞ்சேய் தவநேசன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2009, யூலை 20 ஆந் திகதி கொண்டதுமான 771 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தை நீக்கியும் இரத்துச்செய்தும் இல்லாதொழித்தும் உள்ளேன் எனவும் இனிமேல் சொல்லப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் வெற்றும் வறிதுமாதலும் வேண்டும் என்பதுடன் சட்டத்தில் வலுவற்றதாதலும் வேண்டும் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

சரோஜினி ரட்ணராஜ் நவரட்ணம்.

2009, திசெம்பர் 16.

1-300

# ஏல விற்பனைகள்

## செலான் வங்கி பீ.எல்.சீ. – அத்திடிய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கிணங்க விற்பனை*

*(இவ்வாதனம் கல்திஸ்ஸ என்ற இடத்தில் வசிக்கும் மதசாமி ஜீவரத்னம் என்பவர் அடகுவைப்பாளர் என்ற முறையில் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் மூலம் பெற்றுக்கொள்ளும் கடன் வசதிகளுக்காக வங்கிக்கு பிணை ஆக்கப்பட்டுள்ளது.)*

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை, தொட்ட முனை பிரதேச செயலாளர் அலுவலகம், கெசல்வத்தையில் அமைந்துள்ள களுத்துறைப் பிரிவின் நிலஅளவையாளர் நாயகத்திற்காக அளவையாளர் ஜே. பி. என். எம். த சில்வா அவர்களால் செய்யப்பட்ட 1989.10.20 ஆந் திகதிய 2434 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இல. 85 என அடையாளமிடப்பட்ட (மூலவரைபட இல. 387 இல் இடைப்பிரிவான) பிரித்து வேறுபடுத்தப்பட்ட காணியின் அளவு முப்பத்தாறு தசம் ஏழு ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 36.76பே.) அல்லது சைபர் தசம் சைபர் ஒன்பது மூன்று ஹெக்டெயர் (0.093 ஹெக்டெயர்) அளவுக் காணி**

மேலே காட்டப்பட்டுள்ள ஆதனம் 2010, சனவரி மாதம் 26 ஆந் திகதி பி. ப. 10.30 மணிக்கு அக்காணி அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- பாணந்துறை, கெசல்வத்தை சந்தியில் இருந்து திக்கலஜெடிய வீதி, 2 கி. மீ. அளவில் போகும்போது வீதியின் இடதுபக்கம் உள்ள விஹதித்கம மாதிரி கிராமத்திற்குச் செல்லும் வீதிக்குத் திரும்பி மீண்டும் 200 கி. மீ. அளவில் போகும்போது வீதியின் இடதுபுறத்தில் அமைந்துள்ள பிரசைகள் சாலைக்கு மத்தியில் உள்ள வீதியில் 50 மீற்றர் அளவு போகும்போது வீதியின் இடதுபுறத்தில் குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2009.10.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, 2009.10.19 ஆந் திகதிய ''லங்காதீப'', ''டெயிலி மிரர்'', 2009.10.21 ஆந் திகதிய ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் உடனடியாக பின்வரும் வகையில் காசாகக் கொடுக்கப்பட வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் (10%) பத்து வீதம் ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்கு கொள்வனவு விலையின் 1% (ஒரு வீதம்) உள்ளூர் அதிகாரசபை வரி மற்றும் அதற்குப் பதிலாக அரசோ, உள்ளூர் அதிகார சபையோ பணிக்கும் வேறு தேவையான வரி ;
(3) ஏலதாரருக்கு தரகுத் தொகை 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) சகல பிரசார நடவடிக்கைக்கான கட்டணமும் கொள்வனவு விலையின் 90% ஐயும் விற்கப்பட்ட தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இற்கு கட்டிமுடிக்கப்பட வேண்டும்.

**உரித்து உரிமைகள், வேறு ஏதேனும் விபரங்களுக்காக.**- உதவிப் பொது அதிகாரி (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சீ., இல. 90, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி இல. : 011-2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற அளவையாளர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி இல. : 011-3068185, 011-2572940.

1-317

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0056 1000 0233 - குணவர்தன கொன்ஸ்ட்ரக்ஷன்ஸ்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2008.04.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.11.20 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.11.09 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட அறுபத்தொரு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து நாநூற்றைம்பத்தொன்பது ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 61,97,459.49) 2007, நவெம்பர் 03 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தேழு இலட்சத்து பதினோராயிரத்து நாநூற்றுப்பதினெட்டு ரூபா முப்பத்தொரு சதம் (ரூ. 57,11,418.31) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) இத்துடன் மேலதிக வட்டியாக வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு ஈட்டுமுறி இல. 2513 இன்மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2010.02.03 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.*

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பட்ட ஹேவாஹெட்ட கந்தாஹாய கோரலேயின், தல்வத்த கிராமத்தில் அமைந்த ''பட்டியகெலே எஸ்ட்டேட்'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யூ. எச். பீ. கே. எம். ரீ. அங்கம்மன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1135 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 15 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட்கள் 13 மற்றும் 23 ; கிழக்கிற்கு : லொட் 16 ; தெற்கிற்கு : லொட் 18 ; மற்றும் மேற்கிற்கு : லொட் 14. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பன்னிரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 342/ 216 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட தல்வத்த கிராமத்தில் அமைந்த ''பட்டியகெலே எஸ்ட்டேட்'' என அழைக்கப்படும் காணியின், இல. 1135 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 18 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட்கள் 15 மற்றும் 16 ; கிழக்கிற்கு : லொட் 17 ; தெற்கிற்கு : தமயந்தி மற்றும் ஏனையோர் உரிமம்கோரும் காணி ; மற்றும் மேற்கிற்கு : லொட் 19. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பன்னிரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 342/217 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதன் மீது பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமைகளுடனானது :-

மேற்கூறப்பட்ட தல்வத்த கிராமத்தில் அமைந்த ''பட்டியகெலே எஸ்ட்டேட்'' என அழைக்கப்படும் காணியின், இல. 1135 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 16 (15 அடி உட்பிரவேசம்) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட் 23 ; கிழக்கிற்கு : லொட் 17 ; தெற்கிற்கு : லொட் 18 ; மற்றும் மேற்கிற்கு : லொட்கள் 19 மற்றும் 15. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 2பே.) ஆகும். கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A 342/ 218 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட தல்வத்த கிராமத்தில் அமைந்த ''பட்டியகெலே எஸ்ட்டேட்'' என அழைக்கப்படும் காணியின், இல. 1135 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 23 (20 அடி உட்பிரவேசம்) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட்கள் 5, 4, 3, 2 மற்றும் 1 ; கிழக்கிற்கு : வீதிக்கான ஒதுக்கம் ; தெற்கிற்கு : லொட்கள் 16, 15, 13, 11, 10, 12, 14, 20 மற்றும் 21 ; மற்றும் மேற்கிற்கு : லொட்கள் 22, 24, 9, 8 மற்றும் 7. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பத்து தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 10.5பே.) ஆகும். கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A 342/206 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-318

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை

கணக்கு இல. 1013 5310 5796 - எச். ரீ. தேஷப்பிரிய மற்றும் ஏ. ஆர். லியனகே

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2007.09.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.08.21 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.08.06 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்தொரு இலட்சத்து அறுபதாயிரத்து ஐந்நூற்றுதொண்ணூற்றொரு ரூபா தொண்ணூற்றைந்து சதம் (ரூ. 31,60,591.95) 2007, யூன் 19 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை இருபத்தொன்பது இலட்சத்து இருபதாயிரத்து எழுநூற்றுநாற்பத்தொரு ரூபா அறுபத்துநான்கு சதம் (ரூ. 29,20,741.64) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர்களான சொக்மன் அன்ட் சமரவிக்கிரம என்பவர்கள் மூலமாக 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி பி. ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லேபத்துவின் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் கங்கொடவில பழைய கெஸ்பேவை வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 117 ஐ ஏற்ற ''எலபொடவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973, திசெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 339 இன் அனைத்தும் லொட் ஏ இன் மீள் அளவீடான) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. ஜீ. பியசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, ஏப்பிறல் 6 ஆந் திகதியிடப்பட்ட

மற்றும் இல. 1345 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஏ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : பழைய கெஸ்பேவை வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 115/3 ஐ ஏற்ற வளவுகள் ; கிழக்கிற்கு : களனிவெலி புகையிரத வீதி மற்றும் புகையிரத வீதி ஒதுக்கம் ; தெற்கிற்கு : கான் மற்றும் வரைபட இல. 339 இன் லொட் பி ; மேற்கிற்கு : கங்கொடவில எல எனும் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதினொன்று தசம் ஒன்பது ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 11.97பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1345 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பழைய கெஸ்பேவ வீதியிலிருந்து கூறப்பட்ட இல. 1345 எனும் வரைபடத்தின் லொட் ஏ வரை 18 அடி அகல பிரவேசிக்கும் மார்க்கத்தின் மீது பயணிக்கும் உரிமையுடனானது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973, திசெம்பர் 5 ஆந் திகதியிடப்பட்ட இல. 339 எனும் வரைபடத்தின் அனைத்தும் லொட் ஏ இன் மீள் அளவீடான மேலே விபரிக்கப்பட்டுள்ள லொட் ஏ கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லேபத்துவின் கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் கங்கொட வில பழைய கெஸ்பேவை வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 115/4 ஐ ஏற்ற ''எலபொடவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973, திசெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 339 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஏ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : விஜேரத்னவினால் உரிமம்கோரும் காணி ; கிழக்கிற்கு : களனிவெலி புகையிரத வீதிக்கான ஒதுக்கம் ; தெற்கிற்கு : நீரோடை ; மற்றும் மேற்கிற்கு : பழைய ஆறு எனும் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதினொன்று தசம் மூன்று எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 11.38பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 339 எனும் வரைபடத்திற்கு அமைவாக கல்கிஸ்ஸை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எம்277/212 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-368

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

(நீர்கொழும்பு, ஏத்துகால, இல. 133/1 இல் அமைந்த திருவாளர்கள் ராணி குரூப் கம்பனிகளின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த, மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் (தற்சமயம் நீர்கொழும்பு மாநகரசபை எல்லைகளுள்) ஏத்துகாலயில் அமைந்த மட்டக்குளிய பல்லம என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் ஜீ. எல். பீ. நாணயக்கார தயாரித்த 1990.09.07 ஆந் திகதி யிட்ட வரைபட இல. 9211 இல் விபரித்த துண்டு 1 என அடையாள மிட்ட ஆதனம்.)

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.11.06 ஆந் திகதிய 1627 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2009.10.26 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹெவ்லொக் றோட், கொழும்பு 05 எனும் முகவரியைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட முன்னோடிப் பட்டய ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம ஆகியோர் 2010, பெப்புருவரி 12 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவு மற்றும் மாநகர சபை எல்லைகளுள் ஏத்துகாலயில் அமைந்த மட்டக்குளியேபல்லம என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எல். குரூஸ் தாபரேரா தயாரித்த 1990.10.27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5573/1990 இல் விபரித்த துண்டு B1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்டட குறித்த காணித்துண்டு வடக்கில்: ரோட்டும் ; கிழக்கில் : ஒயாசீஸ் பீச் ஹோட்டலின் துண்டு B2 உம் ; தெற்கில் : என். ஜே. குரேயின் துண்டு C உம் ; மேற்கில் : ரோட்டும் (உயர் பாதைகள்) எல்லைகளாகக் கொண்டு இருபத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணமுடையது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும் :

மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவு, கம்பஹா மாவட்டத்தில் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் (தற்சமயம் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள்) ஏத்துகாலயில் அமைந்த மட்டக்குளியே பல்லம என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எல். பி. நாணயக்கார தயாரித்த 1990.09.07 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 9211 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட பாகம் - வடக்கில் : 10 அடி அகல ரோட்டும் ; கிழக்கில் : வரைபடம் இல. 1631 இல் துண்டு B2 உம் ; தெற்கில் : துண்டு C உம் ; மேற்கில் : நீர்கொழும்பிலிருந்து கொச்சிகடே வரை ரோட் - உயர் தெருக்களும் எல்லைகளாகக் கொண்டு இருபத்து நான்கு தசம் நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 24.4பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அங்கு அமைந்துள்ள சகலதும் மற்றும் போருதொட ரோட் வரிமதிப்பலக்கம் 116 மற்றும் 116/1 ஐக் கொண்டதும்

*அத்துடன் வடக்குக்கு 10 அடி அகல பாதையை உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E 690/275 இல் பதிவு செய்யப்பட்டது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*எச். எம். திலக்கரத்னபண்டா,*
*பிரதான முகாமையாளர்,*
*(அறவிடல் - தொகுதி).*

*இலங்கை வங்கி*
*அறவிடல் - தொகுதிப் பிரிவு,*
*இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,*
*கொழும்பு 01.*

*1-361*

---

## டீஎப்சீசீ வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை**

***வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மாவத்தகம பிரதேச சபை எல்லையில் கண்தாய கோரலயில் வியுடுவிலி அத்பத்து மாவத்தகம மீத்தண்வெல, பல்லேகம, ரம்பத்த மற்றும் ஒளியமுல்ல கிராமங்களில் அமைந்துள்ள நிலஅளவையாளர் டபிள்யூ. டி. பி. ரஜீன்லொட் 1969.07.05 ஆந் திகதிய வரைபட இலக்கம் 1410 இல் காண்பிக்கப்பட்ட லொட் 9 என்ற காணியின் பகுதிபடுத்திய காணித்துண்டானதும் நிலஅளவையாளர் டபிள்யூ. எம். திலகரத்ன பண்டா 2004.03.08 ஆந் திகதி வரையப்பட்ட வரைபட இலக்கம் 2004/59 இல் காண்பிக்கப்பட்டதுமான லொட் 1 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து.***

***(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 24பே.; ஹெக்டெயார் 0.0607)***

***வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மாவத்தகம பிரதேச சபை எல்லையில் வியுடுவிலி அத்பத்து கந்தாய கோரலயில் மதவ, உடுமுல்ல, பில்லஸ்ஸ மற்றும் ஏணபொல கிராமங்களில் அமைந்துள்ள நிலஅளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேகரவின் 1997, ஒற்றோபர் திகதியுடைய வரைபட இலக்கம் 171/97 இல் காண்பிக்கப்பட்ட டேசி மவுண்ட் எஸ்ட்டேட் காணியின் லொட் 33 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து.***

***(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 15பே.; ஹெக்டெயார் 0.0379)***

***மடவ, உடுமுல்ல, பில்லஸ்ஸ மற்றும் ஏணபொல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேகரவின் 1997, ஒற்றோபர் திகதியுடைய வரைபட இலக்கம் 171/97 இல் காண்பிக்கப்பட்ட டேசி மவுண்ட் எஸ்ட்டேட் காணியின் லொட் 34 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து.***

***(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 15பே.; ஹெக்டெயார் 0.0379)***

***மேற்படி மடவ, உடுமுல்ல, பில்லஸ்ஸ மற்றும் ஏணபொல கிராமத்தில் அமைந்துள்ள டேசி மவுண்ட் எஸ்ட்டேட் காணியின் நிலஅளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேகரவின் 1997, ஒற்றோபர் திகதியுடைய வரைபட இலக்கம் 171/97 இல் காண்பிக்கப்பட்ட லொட் 36 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து.***

***(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12பே.; ஹெக்டெயார் 0.0304)***

*(கடன் எடுத்த நுகேகொடவில் பங்குதாரர்களாக கியோ தோ லங்கா என்டபிரைஸஸ் என்ற பெயரில் வியாபாரம் செய்யும் அதரனேகே லயனல் ஜயசிங்க மற்றும் தேவிகா மல்காந்தி ரன்கொத் கெதர முன்பு ஜயசிங்க என்பவர்கள் மேற்படி காணியை டீஎப்சீசீ வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

*கீழ்க்காணும் காணிகளை அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்படும் :*

*(1) லொட் 01, காணி - (0ஏ. 0றூ. 24பே. ; 0.0607 ஹெக்டெயார்) 2010, பெப்புருவரி 1 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கும்,*
*(2) லொட் 33 - (0ஏ. 0றூ. 15பே. ; 0.0379 ஹெக்டெயார்)*
*(3) லொட் 34 - (0ஏ. 0றூ. 15பே. ; 0.0379 ஹெக்டெயார்)*
*(4) லொட் 36 - (0ஏ. 0றூ. 12பே. ; 0.0304 ஹெக்டெயார்) 2010, பெப்புருவரி 1 ஆந் திகதி பி. ப. 12.30 மணிக்கும்*

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.-** *உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு பணமாக செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% ;*
*(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;*
*(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;*
*(4) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;*
*(5) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;*
*(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;*
*(7) மிகுதி 90% கொள்வனவு விலை மற்றும் ஜீஎஸ்ரீ 12.5% மற்றும் சட்டப்படி செலுத்தப்படவேண்டிய தொகைகளையும் வரி மற்றும் அரசாங்கத்தினால் செலுத்தவேண்டியது என்று சொல்லப்பட்ட வேறு கொடுப்பனவுகள் சேர்த்து ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.*

**வேறு விபரங்களுக்காக.-** *டீஎப்சீசீ வர்தன வங்கி லிமிட்டெட்டுடன் தொலைபேசி இல. : 2371371 மூலம் தொடர்புகொள்ளவும்.*

*எல். பி. சேனாநாயக்க,*
*(சமாதான நீதவான்),*
*உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 99, புதுக்கடை வீதி,*
*கொழும்பு 12.*
*தொலைபேசி /பெக்ஸ் : 2445393.*
*தொலைபேசி : 011-3144520.*

*1-351*

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – நாரம்மல கிளை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், உத்துரகோரல தம்பதெனி அத்பத்துவ லீணியவத்த கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். குணசேகரவின் 1998.08.09 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1805 இல் காண்பிக்கப்பட்ட கல்வங்கிய வத்த என்ற காணியின் லொட் 1 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து ஏல விற்பனை

(விஸ்தீரணம் : 0ஏ .1றூ. 6.2பே.)

*(கடன் எடுத்த ஜயகொடி ஆராச்சிகே மயிந்த பண்துல ஜயகொடி என்பவர் மேற்படி உரிய காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் சொல்லப்பட்ட காணியை அதே இடத்தில் என்னால் 2010, சனவரி மாதம் 29 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- 2008.06.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் ''த ஐலண்ட்'', ''லக்பிம'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் ஏல விற்பனை விளம்பரத் துக்காக 2010.01.08 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2010.01.11 ஆந் திகதியுடைய ''த ஐலண்ட்'', ''திவயின'' பத்திரிகை களையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு செல்லும் விதம்**.- நாரம்மல நகரத்தில் இருந்து குளியாபிட்டிய றோட்டில் ஒரு 2 கிலோ மீட்டர் கல்வங்குவ சந்திவரை சென்று பிறகு இக்காணி இந்த றோட்டில் கடைசியாக அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

(7) மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் ''கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ அல்லது நாரம்மல கிளை'' இல் செலுத்த வேண்டும்.

*வேறு விபரங்களுக்காக*.- முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 55, நீர்கொழும்பு றோட், நாரம்மல முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 037-2249916-7, 037-2248550.

எல். பி. சேனாநாயக்க,
சமாதான நீதவான், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி /பெக்ஸ் : 2445393.
தொலைபேசி : 011-3144520.

1-353